Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 11.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 11.05.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

சோம்நாத் கோவிலின் 75ஆவது அமிர்த மஹோத்சவத்தின் பெருவிழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்து கொண்டார்.

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரியில், மீண்டும் முதலமைச்சராக திரு. ரங்கசாமி வருகிற 13-ம் தேதி பதவியேற்க உள்ளார்.

காரைக்கால் மாவட்டத்தில் 2026-2027-ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முழுவீச்சில் தொடங்கியுள்ளன.

ஆன்மீக நம்பிக்கையின் சின்னமாக சோம்நாத் கோவில் திகழ்கிறது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலத்தில் உள்ள சோம்நாத் கோவிலின் 75ஆவது அமிர்த மஹோத்சவத்தின் பெருவிழாவில், இன்று கலந்து கொண்டு பேசிய அவர், இந்த கோவில் புனிதத் தன்மையின் அடையாளமாகத் திகழ்கிறது என்று கூறினார். பழமையை கொண்டாடும் விழாவாக மட்டுமல்லாமல், அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கான நாட்டின் உத்வேகத்திற்கான விழாவாகவும் இது திகழ்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

வேர்களோடு இணைந்திருந்தால் மட்டுமே, ஒரு தேசம் நீண்ட காலம் வலுவாக இருக்க முடியும் என்பதை இந்த ஆலயம் நினைவூட்டுவதாக குறிப்பிட்டார். நாட்டின் முதலாவது 3 அணு சக்தி பரிசோதனைகள் நடைபெற்ற இத்தினத்தில், நம் நாட்டு விஞ்ஞானிகளின் திறன்கள் உலகம் முழுவதற்கும் வெளிப்படுத்தப்பட்டதாக, எடுத்துரைத்தார். இந்த அணுசக்தி சோதனைகள் மூலம், நாட்டின் அரசியல் நிலைப்பாடும், தீர்க்கமான முடிவும் உலக நாடுகளுக்கு பறைசாற்றப்பட்டதாகவும், பிரதமர் குறிப்பிட்டார்.

*பிரதமர் - 2 (9)*

முன்னதாக, சோம்நாத் ஆலயத்திற்கு பேரணியாகச் சென்ற பிரதமரை மக்கள் உற்சாகமாக வாழ்த்தி வரவேற்றனர். சர்தார் வல்லப்பாய் படேலின் ஒற்றுமை சிலையில் மலரஞ்சலி செலுத்தினார். இந்தப் பேரணியில், குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல், துணை முதலமைச்சர் திரு. ஹர்ஷ் சங்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஜோதிர்லிங்க சிறப்புப் பூஜையில் அவர் கலந்து கொண்டார். நாட்டின் 11 புனித நீர் நிலைகளில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரைக்கொண்டு கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்விழாவின் கொடியேற்றத்திலும் பிரதமர் கலந்து கொண்டார்.

*தேசிய தொழில்நுட்ப தினம் -1 (5)*

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா உள்ளிட்டோர் நாட்டின் விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இது குறித்த கூடுதல் தகவல்கள்....

(வாய்ஸ்)

*தேசிய தொழில்நுட்ப தினம் -2 (11)*

(வாய்ஸ்)

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், பொக்ரான் அணு ஆயுத சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதை இந்நாள் குறிப்பதாக எடுத்துரைத்தார். பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், 1998ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்ற பொக்ரான் சோதனையில், இந்தியாவின் கடின உழைப்பையும், விஞ்ஞானிகளின் அளப்பரிய அர்ப்பணிப்பையும் நாடு பெருமிதத்துடன் நினைவு கூர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், டாக்டர் ஜிதேந்திர சிங் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் விஞ்ஞானிகளின் புதுமையான சிந்தனைகளையும், விடா முயற்சியையும் பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*ராஜ்நாத் சிங் வாழ்த்து (8)*

சோம்நாத் கோவிலின் 75ஆவது ஆண்டு புனரமைப்பு விழாவையொட்டி, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மக்களுக்கு

வாழ்த்துத் தெரிவித்துள்ளார். சோம்நாத் ஆலயம் நாட்டின் ஆன்மீக நம்பிக்கையின் அடையாளமாக திகழ்கிறது என்று அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஆன்மீக கலாச்சார நம்பிக்கைகளை வலுப்படுத்தும் நாளாக இந்த ஆலய திருவிழா நடைபெறுவதாகவும் அவர் கூறியுள்ளார். எதிர்கால சந்ததியினர் இக்கோவிலின் பாரம்பரியத்தையும், சிறப்பையும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ் (12)*

உலகளாவிய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, மக்களும், தொழில் வர்த்தகத் துறையினரும் அந்நிய செலாவணிக்கு உட்படுத்தப்படும் பொருட்கள் மீதான செலவை கணிசமாக குறைக்க வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், பொருளாதார நெருக்கடியை ஈடு செய்ய நாம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியமானது என்று குறிப்பிட்டார்.

அத்தியாவசியத் தேவை தவிர, வேறு எந்த பொருளையும் இறக்குமதி செய்து பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த கோரிக்கையை சுட்டிக்காட்டிய திரு. அஸ்வினி வைஷ்ணவ், உலகளாவிய பொருளாதார நெருக்கடியிலும் இந்திய பொருளாதாரத்தை சீராக பராமரிக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளதாகவும் தெரிவித்தார்.

*ராஜ்நாத் சிங் (8)*

மேற்காசியா நெருக்கடி நிலைமைய கண்காணிக்க உயர்மட்ட அமைச்சர்கள் குழுக் கூட்டம் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் டெல்லியில் இன்று நடைபெற்றது.

மேற்காசிய பகுதி மோதல்களை தொடர்ந்து அப்பகுதியில் உருவாகும் நிலைமை குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

மத்திய அமைச்சர்கள் திரு. ஜெ.பி. நட்டா, திரு. ஹர்தீப் சிங் புரி, திரு. சர்பானந்த சோனோவால், திரு. கிரண் ரிஜிஜு, டாக்டர் ஜிதேந்திர சிங், திரு. ராம்மோகன் நாயுடு ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

*புதுச்சேரி - பதவியேற்பு (8)*

புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் வெற்றி பெற்றுள்ளதால் மீண்டும் முதலமைச்சராக திரு. ரங்கசாமி பதவியேற்க உள்ளார். வருகிற 13-ம் தேதி ஆளுநர் மாளிகையில் துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் பதவி பிரமாணம் செய்து வைக்க உள்ளார். இந்த பதவியேற்பு விழாவில் பாஜக தேசிய தலைவர் திரு. நிதின் நபின் கலந்து கொள்ள உள்ளார். மேலும், முதலமைச்சரின் பதவியேற்பு விழாவில் மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மண்டவியா, மேலிட பொருப்பாளர் திரு. நிர்மல்குமார் சுராணா ஆகியோர் பங்கேற்க உள்ளார்.

*மக்கள்தொகை கணக்கெடுப்பு – காரைக்கால் -1 (2)*

காரைக்கால் மாவட்டத்தில் 2026-2027-ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முழுவீச்சில் தொடங்கியுள்ளன. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*மக்கள்தொகை கணக்கெடுப்பு – காரைக்கால் -2 (12)*

(வாய்ஸ்)

மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை சென்சஸ் அலுவலர் திருமதி. இஷிதா ராட்டி, தலைமையில் நடைபெறும் இப்பணியின் முதற்கட்டமாக, வரும் ஜூன் மாதம் 1 ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை கட்டிடங்கள் மற்றும் வீடுகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 2027 பிப்ரவரி மாதம் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடாக, கணக்கெடுப்பு பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையை காரைக்கால் காமராஜர் வளாகத்தில், சார்பு மாவட்ட ஆட்சியரும் மாவட்ட சென்சஸ் அலுவலருமான செல்வி. பூஜா, இன்று தொடக்கி வைத்தார்.

காரைக்கால் வரிச்சிக்குடி தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் நெடுங்காடு சேருமாவிளங்கம் P.K.I.E.T. கல்லூரி ஆகிய இடங்களிலும் இந்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

*மக்கள்தொகை கணக்கெடுப்பு – காரைக்கால் -3 (12)*

வட்டாட்சியர்கள் திரு. பயாத் மூர்த்தி, திரு. சண்முகானந்தம் மற்றும் சார்பு வட்டாட்சியர் திரு. மணிகண்டன் நம்பூதிரி ஆகியோர் ஒருங்கிணைக்கும் இப்பயிற்சிப் பட்டறையில், புதுச்சேரி சென்சஸ் உதவி இயக்குநர் திரு. மோகன் குமார் சிறப்புரையாற்றினார்.

பாலிடெக்னிக் மற்றும் இதர கல்லூரி விரிவுரையாளர்கள் பயிற்சியளிக்கும் இந்தப் பயிற்சி வகுப்பு இரண்டு கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டப் பயிற்சி இன்று தொடங்கி மே 13 வரையிலும், இரண்டாம் கட்டப் பயிற்சி மே 18 முதல் மே 20 வரையிலும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சியில் அனைத்துப் பணியாளர்களும் கலந்துகொண்டு கணக்கெடுப்பு முறைகள் குறித்து விரிவான விளக்கங்களைப் பெற்று வருகின்றனர்.

*தமிழக சட்டப்பேரவை (17)*

தமிழக சட்டமன்றத்தின் 17ஆவது சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர். பேரவையின் தற்காலிகத் தலைவர் திரு. கருப்பையா தலைமையில் இன்று கூட்டம் தொடங்கியது. முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று நன்றி தெரிவித்த சட்டப் பேரவைத் தலைவர், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை வாழ்த்தினார்.

தொடர்ந்து, தமிழக முதலமைச்சராக திரு. ஜோசப் விஜய் உறுதி மொழி கூறி பதவியேற்றுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து,

அமைச்சர்கள் திரு. ஆனந்த், திரு. ஆதவ் அர்ஜுனா, திரு. அருண் ராஜ், திரு. செங்கோட்டையன், திரு. வெங்கட் ரமணன், திரு. நிர்மல் குமார், திரு. ராஜ்மோகன், திரு. டி.கே. பிரபு, ஆகியோர் உறுதிமொழி கூறி பதவியேற்றுக் கொண்டனர்.

இதனையடுத்து, எதிர்கட்சித் தலைவராக, திரு. உதயநிதி ஸ்டாலின் உறுதி மொழி கூறி பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னாள் முதலமைச்சர்கள் திரு. எடப்பாடி பழனிச்சாமி, திரு. ஓ. பன்னீர் செல்வம் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

சட்டப் பேரவைத் தலைவர் தேர்தல் நாளை நடைபெறும் என்று தற்காலிக சபாநாயகர் அறிவித்து பேரவை நடவடிக்கைகளை இன்று ஒத்திவைத்தார்.

*கல்வி உதவித் தொகை (16)*

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும், தேசிய வெளிநாட்டு கல்வி உதவித் தொகை திட்டம், சமூகத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களின் உயர்கல்வி முன்னேற்றத்திற்கு முக்கிய பங்காற்றி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் கொண்ட SC / ST, நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்கள் மற்றும் பாரம்பரிய கைவினை கலைஞர்கள் ஆகிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் QS உலக பல்கலைக் கழக தரவரிசையில், முதல் 500 இடங்களில் உள்ள வெளிநாட்டு கல்வி

நிறுவனங்களில் முதுகலை மற்றும் முனைவர் பட்டப் படிப்புகளைத் தொடர நிதியுதவி பெறுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ், 135 புதிய கல்வி உதவித் தொகைகள வழங்கப்படுகின்றன. இதில், ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்திற்கும் அதிகபட்சமாக 10 இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. 2026-27 தேர்வு ஆண்டிற்கான முதல் சுற்று விண்ணப்பங்கள் தற்போது பெறப்பட்டு வருகின்றன. வரும் 24ஆம் தேதி முதல், ஜூன் மாதம் 2 ஆம் தேதி வரை, nosmsje.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

*கிரிக்கெட் (2)*

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில், தரம்சாலாவில் இன்றிரவு 7.30 மணிக்கு, பஞ்சாப் கிங்ஸ் அணி , டெல்லி கேப்பிடல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

*வானிலை (8)*

வடக்கு இலங்கை கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுவடையக்கூடும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் இன்று முதல் வரும்

16ஆம் தேதி வரை, தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், இடி – மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

சோம்நாத் கோவிலின் 75ஆவது அமிர்த மஹோத்சவத்தின் பெருவிழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்து கொண்டார்.

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரியில், மீண்டும் முதலமைச்சராக திரு. ரங்கசாமி வருகிற 13-ம் தேதி பதவியேற்க உள்ளார்.

காரைக்கால் மாவட்டத்தில் 2026-2027-ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முழுவீச்சில் தொடங்கியுள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. NV / BR / RK